ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

## ஈச்சம்பாடி ஜீயர்
## வாழி திருநாமம்

ஆனி தனில் ஓணத்தில் அவதரித்தோன் வாழியே
வேங்கடத்தைப் பதியாக விரும்புமவன் வாழியே
பூவார்ந்த கழல்களையே போற்றுமவன் வாழியே
பதின்மர் கலை உட்பொருளை பகருமவன் வாழியே
அனவரதம் அரி உருவன் அடி தொழுவோன் வாழியே
எப்பொழுதும் யதிபதியை ஏத்துமவன் வாழியே
முத்தி தரும் முந்நூலும் முக்கோலும் வாழியே
எழில் ஈச்சம்பாடி உறை ஜீயர் தாள் வாழியே

---